**செ.வெ..எண். 04** **நாள் : 09.01.2017**

**<u>பள்ளி மாணவ மாணவிகள் கலந்துக்கொண்ட புகையில்லா போகி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறை சார்பாக சென்னை மாநகரில் உள்ள பள்ளி, கல்லூரிகள் மற்றும் குடிசைப்பகுதிகளில் நோய்கள் உருவாகும் விதம், அவற்றை தடுக்கும் முறைகள், தூய்மையான இந்தியா குறித்து சுகாதார விழிப்புணர்வு கல்வி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது வரும் போகிப் பண்டிகையை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி, எக்ஸ்னோரா கிரேட்டர் சென்னை என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இன்று காலை தி.நகர் சாரதா வித்யாலயா பள்ளி மற்றும் நுங்கம்பாக்கம் வித்யோதயா பள்ளிகளில் ‘‘புகையில்லா போகி’’ குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இவ்விரு நிகழ்வுகளிலும் 3,000 க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் அவர்கள் பங்கேற்று போகியன்று டயர், டியூப், ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை எரிப்பதால் சுற்றுச் சூழலுக்கும் உடல் நலத்திற்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவிகளிடையே விரிவாக எடுத்துரைத்தார் மேலும், காற்று மாசை குறைக்க உதவும் வகையில் மாணவிகளுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது.

பின்பு மாணவிகள் புகையில்லா போகி குறித்த பதாகைகள் மற்றும் பேனர்களுடன் ஊர்வலாமாக சென்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி**